மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவரின் கீழ் இயங்குகின்ற ஒரு குழுவின் பராமரிப்பில் உள்ளது. அந்தக் குழுவில் நம்முடைய மீனளத் துறை இயக்குநர் அவர்கள் ஒரு உறுப்பினராக இருக்கிறார். அதனால் அந்தத் துறைமுகத்தில் ஏற்படுகின்ற குறைபாடுகளை மீனளத் துறை இயக்குநர் அவர்கள், அந்தக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்து, தடுப்புப் பணிகள் மற்ற பணிகளை எல்லாம் நிறைவேற்றுவார். அதனால் இதனை தற்சமயம் தமிழக அரசு ஏற்று நடத்துகின்ற குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 111-ன் கீழ் பொதுப்பணித்துறை அமைச்சரின் அறிக்கை.

வேதாரண்யம் தொகுதியில் விசாக வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்குவதைத் தடுக்க நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 111-வது விதியின் கீழ் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் பேரவைக்கு அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் அடப்பாறு, முல்லையாறு, மானங்கொண்டானாறு மற்றும் வளவனாறு ஆகிய வடிகால் ஆறுகள் உள்ளன. அடப்பாறு, கிழக்கு நோக்கிப் பாய்ந்து கடலில் கலக்கின்றது. முள்ளியாறு, மானங்கொண்டானாறு, வளவனானாறு, ஆகியவை மேற்கு நோக்கிப் பாய்ந்து பாக் ஜலசந்திப் பகுதியில் கடலில் கலக்கின்றன. இந்த ஆறுகள் கடலில் கலக்கும் முன், மணற் பாங்கான நிலங்கள் வழியாகவும், சதுப்பு நிலப் பரப்புகளிலும் பாய்கின்றன. இவற்றின் முகத்துவாரத்திலிருந்து சுமார் 5 முதல் 8 மைல் தூரத்தில் கடைமடை ரெகுலேட்டர்கள் அமைக்கப்படுகின்றன.

ஏப்ரல், மே மாதங்களில் ஏற்படும் உயர் கடல் மட்ட அலைகளின்போதும், அப்போது ஏற்படும் காற்றினாலும், கடல் நீர் மட்டம் 4 அடி உயரத்திற்கு மேல் எழும்பி விடுகிறது. இது

விசாக வெள்ளம் எனப்படுகிறது. இந்த விசாக வெள்ளம் ஆறுகளின் முகத்துவாரம் வழியாக உட் பகுதிக்குச் சென்று சேதம் விளைவிக்கிறது. கடைமடை ரெகுலேட்டர்களுக்குக் கீழ் கரைகள் தாழ்ந்து உள்ள பகுதிகளில், பொதுவாக விவசாயிகளே சிறு கரைகள் அமைத்து உப்பு நீர் உட்புகாவண்ணம் பாதுகாத்துக் கொள்கிறார்கள், கடை மடை ரெகுலேட்டர்கள் பழுதடைந்திருந்தாலோ அல்லது திறந்து வைக்கப்பட்டிருந்தாலோ, ஆற்றின் கடைமடை ரெகுலேட்டர்களுக்கு மேலும் உப்பு நீர் சென்று தாழ்வான பகுதிகளில் சேதம் விளைவிக்கின்றன. இவ்வாறு விசாக வெள்ளத்தால் சேதம் ஏற்படுவதைத் தடுக்க இரண்டு வழிமுறைகள் உள்ளன.

ஒன்று, கடைமடை ரெகுலேட்டர்கள் பழுதுபட்டிருந்தால் இவை உடனடியாகப் பழுது பார்க்கப்பட்டு, இந்த ரெகுலேட்டர்கள் விசாக வெள்ளம் ஆற்றில் உட்புகாவண்ணம் மூடி வைக்கப்பட வேண்டும்.

இரண்டு, தற்போதுள்ள கடைமடை ரெகுலேட்டர்களைத் தவிர ஆற்றின் முகத்துவாரத்திற்கு எவ்வளவு அருகாமையில் ரெகுலேட்டர்கள் கட்ட இயலுமோ, அவ்வளவு அருகாமையில் ரெகுலேட்டர்கள் கட்டுதல். இம்மாதிரி இடங்களில், சாதாரண ரெகுலேட்டர்களைக் கட்டிப் பராமரித்தல் மிகக்கடினம். அதற்குப் பதிலாக தானியங்கி ரெகுலேட்டர்கள் கடல் நீர்மட்டம் உயரும் காலத்தில் உப்பு நீர் உட்புகா வண்ணமும், வெள்ளக் காலங்களில் வெள்ள நீர் விரைவில் வடிவதற்கும் ஏற்ற வகையில் வடிவமைத்து கட்டி இந்த ரெகுலேட்டர்களை மேற் புறத்தில் கரைக்குத் தகுந்த மண், வெளியில் இருந்து கொண்டு வந்து வலுவான கரைகள் அமைக்க வேண்டும். இதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, திட்ட மதிப்பீடுகள் தயாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேதாரண்யம் பகுதியில் உள்ள வடிகால் ஆறுகளின் கடைமடை ரெகுலேட்டர்கள் மற்றும் இதர விவரங்கள்பின்வருமாறு —

அடப்பாறு:—இந்த ஆற்றில் கடைமடை ரெகுலேட்டர் ஒன்று உண்டு. இந்த ரெகுலேட்டர் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அடப்பாறு அருகில் உள்ள அடவலஞ்சான்கரை, தலைஞாயிறு கிராமப் பகுதி, விளைநிலங்களில் கடல் நீர் புகுவதைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட கரையாகும். இக்கரையில், மழைக் காலங்களில் பல இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டு விடுகின்றன. இந்த உடைப்புகள் மூலம் விசாக வெள்ளம் உப்பு நீர்

சென்று சேதம் விளைவிக்க வாய்ப்புள்ளது. உடைப்புகள் ஏற்படாவண்ணம் இந்தக் கரையை பலப்படுத்த ஆய்வு செய்து மதிப்பீடுகள் தயார் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

மானங்கொண்டானாறு :— ஆதனூர் கடைமடை ரெகுலேட்டர் உள்ளது இந்த ஆற்றில். இந்த ரெகுலேட்டர் நல்ல நிலையில் உள்ளது. சென்ற ஆண்டு சிலர் ரெகுலேட்டர் பலகைகளை நெம்பிவிட்டதால், உப்புநீர் உட்புகுந்துவிட்டது. இந்த ஆண்டு இதுபோன்று நிகழாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முள்ளியாறு :—முள்ளியாற்றில் கடைமடை ரெகுலேட்டர் ஒன்று வாய்மேடு கிராமத்தின் அருகே உள்ளது. இந்த ரெகுலேட்டர் நல்ல நிலையில் உள்ளது. ஆனால் சில மீனவர்கள் இந்த ரெகுலேட்டர் கதவுகளை இரவு நேரத்தில் நெம்பி விட்டதால் உப்புநீர் முள்ளியாற்றில் உட்புகுந்தது. இதுபற்றி வாய்மேடு காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டுள்ளது.

(முற்பகல் 10–10)

முள்ளியாறில் தென்னாடார் இறைவைத் திட்டத்திற்கு நீர் எடுக்க ஒரு படுகை அணை அமைக்கப்பட்டுள்ளது. இப்படுகை அணையின் கதவுகள் சேதமடைந்துள்ளதால், இதனைப் பழுது பார்க்கும் பணி மேற்சொள்ளப்பட்டுள்ளது. இப்படுகை அணையின் மேற்பகுதியில் முள்ளியாற்றில் வலது கரை தாழ்வாக உள்ளதால் உப்புநீர் பரவி சுமார் 10 ஏக்கர் விளை நிலம் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. எனவே, இப்படுகை அணைக்கு மேற்புறத்தில் முள்ளியாற்றின் வலது கரையை உயர்த்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. படுகை அணைக்குக் கீழ் முள்ளியாறு நடுக்கண்டி, பட்டாணிக்கண்டி என்று இரு கிளைகளாகப் பிரிகின்றது. இந்த இரண்டு பிரிவுகளின் மூலமாகவும், உப்புநீர் வாய்மேடு பகுதிக்குப் புகாவண்ணம் தடுக்க, வேதாரணியம் ஊராட்சியால் ஆண்டுதோறும் மண் கவணைகள் அமைக்கப்பட்டு வந்தன. ஆனால் நிதி நிலைமை காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மண் கவணைகள் அமைக்கப்படவில்லை, இந்தப் பகுதிகளில் நிரந்தர நிவாரணம் அளிக்கும் வகையில் முள்ளியாற்றில் தென்னாடார் கிராமத்திற்குக் கீழே ஒரு கடைமடை ரெகுலேட்டர் கட்டுவது பற்றியும் கரைகள் அமைப்பது பற்றியும் ஆய்வு செய்து மதிப்பீடு தயாரித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வளவனாறு :—இந்த ஆற்றில் கடைமடை ரெகுலேட்டர் ஒன்று உள்ளது. இந்த ரெகுலேட்டர் கதவுகள் பழுது பார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால், இந்தப் பகுதியில் உள்ள மீனவர்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பின்படி

1989 மே 5] [திரு. துரைமுருகன்]

ரெகுலேட்டரின் 13 கதவுகளில் 2 (இரண்டு) கதவுகள் எப்போதும் திறந்தே வைக்கப்பட்டு வருகின்றன. இதனால், உட்புகும் உப்பு நீரைத் தடுக்க இந்த ரெகுலேட்டரின் மேற்பகுதியில் கிராம மக்களே ஒரு மண் அணை அமைத்துள்ளனர். இக்கரையைத் தாண்டி உப்புநீர் உட்புகுவதில்லை.

அடப்பானுக்கு, அருகில் உள்ள அடவலஞ்சான்கரை உடைப்பு களை அடைத்துக் கரையைப் பலப்படுத்தவும் முள்ளியாற்றில் தென்னாடார் கிராமத்திற்கு கீழே ஒரு கடைமடை ரெகுலேட்டர் அமைக்கவும் ஆய்வு செய்து மதிப்பீடுகள் தயாரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

3. தகவல் கோரல்

செய்தித் துறை இயக்குநரின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்ளாதது குறித்தும் பொதுப்பணித் துறைப் பணிகள் மூலமாக ஆவுடையார் கோவில் பகுதியில் சில கிராமங்களுக்குத் தண்ணீர் வரத்துப் பாதிப்பு குறித்தும்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட ஒரு பொருள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்காக ஆவன செய்ய வேண்டு மென்பதனை நான் அவரிடத்திலே எதிர்பார்க்கிறேன். திரு. நடராஜன் அவர்கள், செய்தித் துறையில் துணை இயக்குநராக பணியாற்றுபவர். அவர் ஏற்கெனவே பதவியை விட்டு நான் விலகிக் கொள்கிறேன் என்று, ராஜினாமா செய்து விட்டேன் என்று ராஜினாமா கடிதத்தை அனுப்பி விட்டார். ராஜினாமா ஏன் ஏற்கப்படவில்லை என்கின்ற விவாதம் வருகின்றபோது அது 'ரொடீனாக' நடக்கிறது. சில அதிகாரிகள் பத்திரிகைகளில் இருக்கிறார்கள். சில பேர் வெளியே போய் விடுகிறார்கள். ஏன் ஏற்கப்படவில்லை என்பதற்கு அவர் வீடு கட்டுவதற்கும், கார் வாங்குவதற்கும் அரசாங்கத்திடமிருந்து 12 வருடத்திற்கான கடன் வாங்கியிருந்தார். அந்தக் கடன் திரும்பத் தரப்படவில்லை. எனவே அவரது ராஜினாமா ஏற்கப்படவில்லை என்று அரசின் சார்பிலே முதலமைச்சர் அவர்களும், செய்தித் துறை அமைச்சர் அவர்களும் அன்றைக்குப் பதில் சொன்னார்கள். அதற்கான ஒரு தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 27 ஆம் தேதியே சலான் நம்பர் 5549, 5650 ஆகியவற்றின்கீழ் ரூ. 68,000, 61,000 என்று அவர் கட்ட வேண்டிய பணத்தை கட்டி முடித்துவிட்டு, தன்னுடைய ராஜினாமா ஏற்கப்பட வேண்டு மென்ற கடிதத்தையும் 27 ஆம் தேதி துறையினுடைய செய லாளருக்கு அனுப்பியிருக்கிறார். அரசு அதை ஏற்றுக் கொண்டு,